**(Chapter XXIII code of Criminal Procedure Code)**
**IN THE COURT OF DOMESTIC VIOLENCE ACT, COIMBATORE.**

**Calendar** **DVA No: 597/2019**
**Miscellaneous**
**Preliminary Register**

**Prosecution** ம.சா. **1**

**Name** : ஜாஸ்மின்

Father's Name :
Village
Taluk :
Calling
Religion :
**Age** :
Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the day or 08.10.2020

முதல் விசாரணை

சாட்சி ஆஜர் நிருபணப்பிரமாணம் வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டது. நான் சொல்லி தான் அதிலுள்ள சங்கதிகள் தட்டச்சு செய்யப்பட்டது. அதிலுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

என்னுடைய குடும்ப புகைப்படத்தை **ம. சா. ஆ.** 1 ஆகவும், 1ம் எதிர்மனுதாரர் 2வதாக திருமணம் செய்து கொண்ட பெண்ணுடன் எதிர்மனுதாரர்கள் மூவரும் சேர்ந்து எடுத்துக் கொண்ட புகைப்படத்தினை **ம. சா. ஆ.** 2 ஆகவும், 02.07.2019 தேதியன்று எதிர்மனுதாரர் எனது பள்ளிவாசல் மூலமாக அனுப்பிய தலாக் அறிவிப்பின் மலையாள நகல் **ம. சா. ஆ.** 3 ஆகவும், ( ஒளிநகலாக இருப்பதால் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது ), 14.10.201 ல் மேற்கூறிய அறிவிப்பின் தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்டு நோட்டரி வழக்கறிஞரால் சான்றிடப்பட்ட நகல் **ம. சா. ஆ.** 4 ஆகவும்,

10.08.2019 தேதியன்று 1ம் எதிர்மனுதாரருக்கு நான் அனுப்பிய தலாக் மறுப்பு அறிவிப்பின் அலுவலக நகல் **ம. சா. ஆ.** 5 ஆகவும், 22.08.2019 தேதியன்று மேற்படி அறிவிப்பு பெறப்படாமல் திருப்பப்பட்ட அஞ்சலக உறை **ம. சா. ஆ.** 6 ஆகவும், ( அஞ்சலக உறையில் ஜுலை மாதத்தேதிகள் குறிப்பிடப்பட்டுள்ளதால் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது ), 03.09.2019 ம் தேதியன்று எதிர்மனுதாரர்களுக்கெதிராக நான் துடியலூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் கொடுத்த புகாரின் நகல் **ம. சா. ஆ.** 7 ஆகவும், 17.09.2019 தேதியன்று எதிர்மனுதாரர்களுக்கெதிராக நான் கோவை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் அளித்த புகாரின் நகல் **ம. சா. ஆ.** 8 ஆகவும் , 23.11.2018 ம் தேதியிட்ட வீட்டு வாடகை ஒப்பந்த பத்திரத்தின் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **ம. சா. ஆ.** 9 ஆகவும், 2005 முதல் 2009ம் ஆண்டிற்கான குடும்ப அட்டையின் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **ம. சா. ஆ.** 10 ஆகவும், என் ஆதார் அட்டையின் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **ம. சா. ஆ.** 11 ஆகவும், 1ம் எதிர்மனுதாரரின் ஆதார் அட்டையின் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **ம. சா. ஆ.** 12 ஆகவும், கோவை மாவட்ட சமூக நல அலுவலரிடம் நான் கொடுத்த புகார் மற்றும் அவரால் எனக்கு வழங்கப்பட்ட சி.எம்பி. எண் 1289/2019 மற்றும் 1290/2019ன் உத்தரவு நகல்கள் மற்றும் அவ்வுத்தரவினை பின்பற்றுவதாக 1ம் எதிர்மனுதாரர் சமூக நல அலுவலருக்கு எழுதிக்கொடுத்த உறுதிமொழிக்கடிதத்தின் நகலினை **ம. சா. ஆ.** 13 ஆகவும், எனக்கு உத்தரவான வீட்டின் பகுதியில் சமையலறை மேடை இல்லாததை காட்டும் விதமான புகைப்படம் **ம. சா. ஆ.** 14 ஆகவும், (எதிர்மனுதாரர் தரப்பில் எந்த இடத்தில் புகைப்படம் எடுக்கப்பட்டது தெரியவில்லை என்று கூறியதால் ஆட்சேபணையுடன் .குறியீடு செய்யப்பட்டது ) எனது தரப்பு ஆவணமாகக் குறியீடு செய்ய வேண்டுகிறேன். **ம.சா.** 1 ன் மூலம் **ம. சா. ஆ. 1 முதல் 14** வரையான

ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை

குறுக்கு விசாரணை எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுதலின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.